நாமக்கல் மாவட்டம், கொல்லிமலை வட்டம், எல்லக்கிராய் மலை கிராமத்தில். மலைவாழ் பகுதிகளில் வசிக்கும் அனைவருக்கும் ஹீமோகுளோபினோபதி நோய் கண்டறியும் பரிசோதனைகள் மற்றும் ரூ.40 கோடி மதிப்பீட்டில் உயிர் காக்கும் உயர் ரக மருந்துகள் வழங்கும் திட்டத்தினை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (30.05.2023) தொடங்கி வைத்தார். உடன் வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், பாராளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் கே.ஆர். என்.இராஜேஸ்குமார் சேந்தமங்கலம் சட்டமன்ற உறுப்பினர் கு.பொன்னுசாமி ஆகியோர் உள்ளனர்.

தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை ஆண்டு முழுவதும்

தி.மு.க. தொழிலாளர் அணியினர் சிறப்பாகக் கொண்டாடிடுவோம்!

மாநில நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம்!

சென்னை, ஜூன் 1 - தி.மு.க. தொழிலாளர் அணி மாநில நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம் 27-5-2023 அன்று காலை 11.00 மணி அளவில், சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், தொழிலாளர் அணிச் செயலாளர் பிடிசி ஜி.செல்வராஜ் தலைமையில் நடைபெற்றது.

தொழிலாளர் அணியின் மாநில துணைச் செயலாளர்கள் பிடிசி.வெ.பாலு, இராஜா குப்புசாமி, கொல்லாபுரம் ச.இராஜேந்திரன், மு.ராஜகாந்தம், ஆர்.வரதன், சேலம் சி.காசிநாதன், கோவை நா.தமிழரசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் விவரம் வருமாறு:

தமிழே உயிராக, தமிழினமே உணர்வாக, தமிழர் நலனும் தமிழ்நாட்டின் வளர்ச்சியுமே வாழ்நாள் செயல் திட்டமாகக் கொண்ட ஓய்வில்லாச் சூரியனும் தனது 94 ஆண்டு ஆயுட்காலத்தில் 80 ஆண்டு கால பொதுவாழ்க்கைக்குச் சொந்தக்காரரும் ஒரு நூற்றாண்டுகால திராவிட இயக்க வரலாற்றில் முக்கால் நூற்றாண்டுகாலப் பங்களிப்பாளரும் அரை நூற்றாண்டு காலம் கழகத்தின் தலைவராக இருந்து தமிழ்நாட்டு அரசியலின் அச்சாணியாக செயல்பட்டவரும் களம் கண்ட 13 தேர்தல்களிலும் வெற்றி கண்ட சாதனையாளரும் ஐந்து முறை தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்று மாநிலத்தின் ஒவ்வொரு குடும்பத்திற்கும் நலன் விளைவிக்கும் திட்டங்களை வழங்கியவரும் இந்திய ஜனநாயகக் காவலராகத் திகழ்ந்த மூத்த அரசியல் தலைவரும் இலக்கியம் கவிதை இதழியல் நாடகம் திரைப்படம் எனத் தொட்ட துறைகள் அனைத்திலும் வெற்றி முத்திரை பதித்த பன்முகத்திறன் கொண்ட படைப்பாளரும் - தான் ஆட்சிக் கட்டிலில் முதலமைச்சராக அமர்ந்த போதெல்லாம் தமிழ்நாட்டு தொழிலாளர்கள் நலனை முன்னிருத்தி, அத்தொழிலாளர்களுக்காக பல்வேறு திட்டங்களையும் சலுகைகளையும் அளித்து, தொழிலாளர்களின் பாதுகாவலனாகவும் - தொழிலாளர்களின் தோழனாகவும் இருந்தவரும் உலகெங்கும் வாழும் தமிழர்களின் நெஞ்சங்களில் நிறைந்தவருமான நம் 'தமிழினத் தலைவர்' கலைஞர் அவர்களின் நூற்றாண்டு 2023 சூன் 3ஆம் நாள் தொடங்கவுள்ளதை யொட்டி;

நூற்றாண்டு நாயகர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை எழுச்சியோடும் உணர்ச்சியோடும் எங்கெங்கும் நடத்திட வேண்டுமென தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற தி.மு.க. உயர்நிலை செயல்திட்டக் குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி;

தி.மு.க. தொழிலாளர் அணியின் சார்பாக மாவட்டந்தோறும் ஒவ்வொருவரின் நெஞ்சிலும் நிலைத்திடும் வகையில், 2023 சூன் 3ஆம் தேதி முதல் 2024 ஜூன் 3ஆம் தேதி வரையிலான ஓராண்டு முழுவதும் தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை கொண்டாடுவது எனவும்; புதியதாக நியமிக்கப்பட்ட மாவட்ட தொழிலாளர் அணியின் நிர்வாகிகள், அந்தந்த மாவட்டக் கழகச் செயலாளர்களுடன் இணைந்து கலைஞர் நூற்றாண்டு விழாவினை சிறப்பாக கொண்டாடிட வேண்டுமென இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

சூன் 3 அன்று வடசென்னையில் நடைபெறும் தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழாப் பொதுக்கூட்டத்திலும்; சூன் 20ஆம் நாள் திருவாரூரில் எழிலுற அமைக்கப்பட்டுள்ள கலைஞர் கோட்ட திறப்பு விழாவிலும் தி.மு.க. தொழிலாளர் அணி நிர்வாகிகள் மற்றும் தொழிலாளத் தோழர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டு சிறப்பிப்பது என இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

இந்திய ஒன்றியத்தின் முதன்மையான முதல்வரும் - 'திராவிட மாடல்' ஆட்சி நடத்தி வரும் தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் ஒன்றிய அரசின் புதிய தொழிலாளர் நல சட்டத்தின்படி 12 மணி நேர வேலை என்பதை 8 மணி நேரம் மட்டுமே வேலை என்பதை மாற்றி தந்து, கழகத் தலைவர் தளபதி அவர்கள் என்றுமே "தொழிலாளர்களின் தோழன்" என்பதை மீண்டும் நிரூபணம் செய்த தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களுக்கு, தி.மு.க. தொழிலாளர் அணிச் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியை இக்கூட்டம் தெரிவித்துக் கொள்கிறது.

தான் தமிழ்நாடு முதலமைச்சராக பொறுப்பேற்ற நாளிலிருந்து தமிழ்நாட்டில் தொழில் துறையில் புரட்சி ஏற்படுத்தி, அதன் மூலம் தமிழ்நாட்டை இந்திய துணைக் கண்டத்தில் முதன்மை மாநிலமாக்கிட அல்லும் பகலும் அயராது பாடுபட்டு வரும் கழகத் தலைவர் அவர்கள், தற்போது சிங்கப்பூர், ஜப்பான் ஆகிய நாடுகளுக்குச் சென்று, அதிக முதலீட்டில் புதிய தொழிற்சாலைகளை கொண்டு வரவும், அதன் மூலம் பல இலட்சக்கணக்கான தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கவும் அயல்நாட்டு பயணம் மேற்கொண்டுள்ள தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களுக்கு தி.மு.க. தொழிலாளர் அணியின் சார்பில் பாராட்டுதல்களை தெரிவிப்பதோடு, அவரது அயலகப் பணயம் வெற்றி பெற வாழ்த்துக்களையும் இக்கூட்டம் தெரிவித்துக் கொள்கிறது.

கழக தொழிலாளர் அணியை அனைத்து மாவட்டங்களிலும் சிறப்பான முறையில் செயல்படும் வகையில் கட்டமைப்பை ஏற்படுத்த, ஒவ்வொரு ஒன்றியம், நகரம், பகுதி மற்றும் பேரூர் பகுதிகளுக்கு மாநில நிர்வாகிகள் சென்று, அந்தந்த மாவட்டக் கழகச் செயலாளர்களுடன் ஒப்புதல் பெற்று, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர்க் கழகத்திற்கான தொழிலாளர் அணி நிர்வாகிகளை தேர்வு செய்து நியமிப்பது என இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

தொழிலாளர் விரோதப் போக்கை தொடர்ந்து கடைபிடித்து வரும் பா.ஜ.க. ஒன்றிய அரசு, தான் பதவி ஏற்ற நாள் முதல் எதிர்க்கட்சிகளை அச்சுறுத்தும் விதமாக, தன் கீழ் இயங்கும் வருமானவரித் துறை, அமலாக்கத் துறை மற்றும் சி.பி.ஐ. போன்ற அமைப்புகளை கொண்டு, ஜனநாயகத்திற்கு விரோதமாகவும் - நேர்மைக்கு எதிராகவும் தொடர்ந்து செயல்பட்டு வரும் ஒன்றிய பா.ஜ.க. அரசை கழக தொழிலாளர் அணி வன்மையாக கண்டிக்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கோவை மாவட்டம், பேரூர்,

பட்டீஸ்வர சுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான ரூ. 100 கோடி மதிப்பீட்டிலான நிலம் மீட்பு!

கோவை, ஜூன் 1 - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படியும், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவுறுத்தலின்படியும் இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்களுக்குச் சொந்தமான சொத்துக்களை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்கும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. அதன்படி 29.05.2023 அன்று கோவை மாவட்டம், பேரூர், அருள்மிகு பட்டீஸ்வரசுவாமி திருக்கோயிலுக்கு சொந்தமான ரூ.100 கோடி மதிப்பீட்டிலான நிலம் மீட்கப்பட்டு திருக்கோயில் வசம் சுவாதீனம் பெறப்பட்டுள்ளது.

கோவை, பேரூரில் பட்டீஸ்வரசுவாமி திருக்கோயிலுக்கு சொந்தமாக 17.96 ஏக்கர் பரப்பிலான நிலம் 11 நபர்களால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருந்தது. கோவை இணை ஆணையர் அவர்களின் சட்டப்பிரிவு 78ன் படியும், ஆணையரின் மேல்முறையீட்டு சீராய்வு மனு உத்தரவின்படியும், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள்துறை அரசாணையின் படியும் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட நிலத்தை மீட்க உத்தரவிடப்பட்டது.

அதனை தொடர்ந்து, கோவை மண்டல இணை ஆணையரின் நேரடி மேற்பார்வை மற்றும் உத்தரவின்படி கோவை உதவி ஆணையர் சி.கருணாநிதி முன்னிலையில் திருக்கோயில் உதவி ஆணையர் / செயல் அலுவலர், மண்டலத்திலுள்ள பிற திருக்கோயில்களின் செயல் அலுவலர்கள் மற்றும் ஆய்வர்களை கொண்ட குழு அமைக்கப்பட்டது. இக்குழுவினர் காவல்துறை மற்றும் வருவாய்துறை அலுவலர்களின் உதவியுடன் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட நிலத்தினை மீட்டு திருக்கோயில் வசம் ஒப்படைத்தனர். மீட்கப்பட்ட சொத்தின் தற்போதைய சந்தை மதிப்பு ரூ.100 கோடியாகும்.

மேலும் மீட்கப்பட்ட நிலங்களில் தென்னை மற்றும் பாக்கு மரங்கள் தோப்பு அமைந்துள்ளது. இவையனைத்தும் பொது ஏலத்தின் மூலம் ஆண்டு குத்தகைக்கு விட்டு வருவாய் ஈட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நிகழ்வின்போது திருக்கோயில் உதவி ஆணையர்/ செயல் அலுவலர் திருமதி கே.விமலா, பேரூர் வருவாய் வட்டாட்சியர் திருமதி இந்துமதி, வட்டாட்சியர் (ஆலய நிலங்கள்) சதீஷ், காவல்துறை துணை கண்காணிப்பாளர் ராஜபாண்டியன், திருக்கோயில் அலுவலர்கள் மற்றும் திருக்கோயில் பணியாளர்கள் உடனிருந்தனர்.

மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் தலைமையில்

கந்தர்வக் கோட்டை தொகுதி செயல்வீரர்கள் கூட்டம்!

புதுக்கோட்டை, ஜூன் 1 உச்சநீதிமன்றத்தில் தொடர்ந்து வாதாடி ஜல்லிக்கட்டு போட்டிக்கு தடையில்லை என வெற்றியை பெற்றுத்தந்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கான பாராட்டு விழா பொதுக்கூட்டம் அனைத்து ஜல்லிக்கட்டு பேரவைகளின் சார்பில் எதிர்வரும் ஜூன் 5 ஆம் தேதி நடைபெறுகிறது.

அதனையொட்டி விழா தொடர்பான கந்தர்வ கோட்டை சட்டமன்றத் தொகுதி செயல்வீரர்கள் கூட்டம் காலை 10 மணியளவில் கீரனூர் ஒ.எஸ்.பி. திருமண மண்டபத்தில் மாவட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்ச்சியில், மாநில விவசாயத் தொழிலாளர் அணி துணைச் செயலாளரும் ஒன்றியப் பெருந்தலைவருமான கே.ஆர்.என்.பேரஸ், மாவட்ட துணைச் செயலாளர் பெ.ராஜேஷ் வரி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் சு.சண்முகம், ஒன்றிய கழக செயலாளர்கள் என்.சேட்டு, ஓ எஸ் வெங்கடாசலம், வீ.முத்து கிருஷ்ணன், ஆர்.ஆர்.எஸ்.மாரிமுத்து, சி.சண்முகம், மா.தமிழய்யா பேரூர் கழக செயலாளர்கள் ப.அண்ணாத்துரை, உ.முருகேசன் மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி அமைப்பாளர் டாக்டர்.செ.குறிஞ்சிவாணன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் கலைஞர் கருணாநிதி, கே.எம்.கே.ரவிக்குமார், அஸ்ரப் அலி, வழக்கறிஞர் சின்னத்துரை, எம்.ஏ.எம். இம்தியாஸ், கை.பழனிச்சாமி, குளத்தூர் மணிராஜன், குளவை ஓ.ஆறுமுகம், சண்முகம், சௌந்தர்ராஜன், எஸ்.வி.ஆர். ஸ்டாலின் ராஜா, செல்லத்துரை, பரூக் உள்ளிட்ட ஒன்றிய பேரூர் கிளை கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் பங்கேற்றனர்.

தமிழ்நாடு அரசு

பொதுப்பணித்துறை, கட்டடம் (க & ப) வட்டம், சேப்பாக்கம், சென்னை-5

மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை எண் : 04 கட்டட (க & ப) வட்டம் 2023-2024 / நாள். 23.05.2023

மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை : மொத்த வகை /இரு உறை முறை

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும் கண்காணிப்புப் பொறியாளர், பொதுப்பணித்துறை கட்டட (க (ம) ப) வட்டம் சென்னை-5 அவர்களால் பொதுப்பணித்துறையில் தகுந்த வகுப்பில் பதிவு செய்துள்ள ஒப்பந்ததாரர்களிடமிருந்து கீழ்காணும் பணிக்காக மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றது.

வ.எண்	பணியின் பெயர் மற்றும் முன்வைப்புத் தொகை	பணியின் தோராய மதிப்பீட்டுத் தொகை	காலம்	பணி செய்ய தகுதியான ஒப்பந்ததாரரின் தகுந்த வகுப்பு
1.	இரு உறை முறை சென்னை மாவட்டம், பெரம்பூரில் புதிய தாலுக்கா அலுவலகக் கட்டடம் கட்டும் பணி. மு.வை.தொகை: ரூ.3,67,500/-	ரூ.714.30 இலட்சங்கள்	10 மாதங்கள்	வகுப்பு II

1. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களுக்கு https://tntenders.gov.in/ என்ற இணையுதள முகவரியை அணுகவும்.
2. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் : 04.07.2023 மாலை 03.00 மணி வரை
3. ஒப்பந்தப்புள்ளிகள் இணையதளம் மூலம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம்: 04.07.2023 மாலை 04.00 மணி

செ.ம.தொ.கி / 2774 / ஒப்பந்தப்புள்ளி /2023

கண்காணிப்புப் பொறியாளர், பொதுப்பணித்துறை கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம், சேப்பாக்கம், சென்னை -5

"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"

ரூ.2000 நோட்டுகளை வாபஸ் பெற்றதால்

இந்திய ரூபாய் மீதான நம்பகத்தன்மையில் சந்தேகம்!

ஒன்றிய முன்னாள் நிதியமைச்சர் ப.சிதம்பரம் குற்றச்சாட்டு!

மும்பை, ஜூன் 1- 2000 ரூபாய் நோட்டுக்கள் அறிமுகம் மற்றும் திரும்பப் பெறும் நடவடிக்கையானது இந்திய ரூபாய் மீதான நேர்மை, நம்பகத்தன்மையில் சந்தேகத்தை ஏற்படுத்தி உள்ளதாக முன்னாள் நிதியமைச்சர் ப.சிதம்பரம் விமர்சித்துள்ளார்.

2000 ரூபாய் நோட்டுக்களை திரும்ப பெறுவதாக சமீபத்தில் ஒன்றிய அரசு அறிவித்தது. இதனை காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவரும், முன்னாள் நிதியமைச்சருமான ப.சிதம்பரம் விமர்சித்துள்ளார். அவர் கூறுகையில், "முக்கிய பொருளாதார குறியீடுகள் கீழ் நோக்கி செல்கின்றன. பொருளாதாரம் உயர் வளர்ச்சிப்பாதையை எட்டும் என்ற நம்பிக்கை குறைவாக இருக்கிறது. மணிப்பூர் கலவர சம்பவத்தில் 75 உயிர்கள் பலியாகி உள்ளன. மணிப்பூரில் நிலைமை கவலைக்கிடமாக இருக்கிறது.

ஆனால் பிரதமர் ஏன் தொடர்ந்து மவுனம் காத்து வருகிறார். கடந்த ஒரு மாதமாக மல்யுத்த வீரர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களை எந்த ஒரு அமைச்சரும் சென்று சந்திக்கவில்லை. ஒரு எம்.பி.க்காக பதக்கம் வென்ற மல்யுத்த வீரர்களை 30 நாட்கள் போராட்டம் செய்ய ஏன் அனுமதிக்கிறீர்கள்? கடந்த ஒன்பது ஆண்டுகளில் தேசிய ஜனநாயக கூட்டணி அரசு முற்றிலும் தோல்வியடைந்துள்ளது. அரசு தனது தவறுகளை சரி செய்து அனைத்து மக்களுக்காகவும் ஆட்சி செய்வதற்கு முயற்சி எடுக்கவில்லை. 2024ம் ஆண்டு பொது தேர்தலுக்கான கவுண்ட் டவுன் தொடங்கி விட்டது" என்றார்.

மம்தா கருத்துக்கு ஆதரவு!

நாடு முழுவதும் காங்கிரஸ் கட்சி வலுவாக உள்ள இடங்களில் அவர்களை மாநில கட்சிகள் ஆதரிக்க வேண்டும் என முதல்வர் மம்தா கூறியிருந்த நிலையில் முன்னாள் நிதிய மைச்சர் இதனை வரவேற்றுள்ளார். இது குறித்து ப.சிதம்பரம் கூறுகையில், 'முதல்வர் மம்தாவின் அறிக்கையை வரவேற்கிறேன். அவர் காங்கிரஸ் கட்சியுடனான பேச்சுவார்த்தையை முன்னெடுத்து செல்ல வேண்டும். பேச்சுவார்த்தை புரிதலை ஏற்படுத்தும் என்று நம்புகிறேன்' என்று தெரிவித்துள்ளார்.

நாமக்கல் கிழக்கு மாவட்டம் முள்ளுக்குறிச்சியில்

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா ஜல்லிக்கட்டுப் போட்டி!

அமைச்சர் மரு. மா.மதிவேந்தன் துவக்கி வைத்தார்!

நாமக்கல் ஜூன் 1 - நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் வட்டம், நாமகிரிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், முள்ளுக்குறிச்சி ஊராட்சி, தும்பல்பட்டி கிராமத்தில் முத்தமிறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு துவக்க விழாவை முன்னிட்டு நடைபெற்ற மாபெரும் ஜல்லிக்கட்டு போட்டியை வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் கொடியசைத்து துவக்கி வைத்து, பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா தலைமை வகித்தார்.

முன்னதாக வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் தலைமையில், ஜல்லிக்கட்டு வீரர்கள் தமிழ்நாடு அரசின் ஜல்லிக்கட்டு போட்டி தொடர்பான விதிமுறைகளுக்குட்பட்டு, அனைத்து விதி முறைகளையும், முறையாக கடைப்பிடித்து, ஜாதி, இன, வட்டார பாகுபாடின்றி அனைத்து வீரர்களும், ஒற்றுமையாக செயல்பட்டு, காளைகளை துன்புறுத்தாமல், அமைதியாக ஜல்லிக்கட்டை விளையாடுவோம் என்று உறுதி ஏற்றுக் கொண்டனர்.

இந்த ஜல்லிக்கட்டு போட்டியில் 300 மாடுபிடி வீரர்கள் கலந்து கொண்டனர். மேலும் 300 காளைகள் வாடிவாசலில் இருந்து அவிழ்த்து விடப்பட்டன. மாடு பிடி வீரர்களுக்கான 6 மருத்துவக்குழு, காளைகளுக்கான 8 கால்நடை மருத்துவக்குழு, காவல் துறையினர் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். பின்னர் ஜல்லிக்கட்டு போட்டியில் வெற்றி பெற்ற மாடுபிடி வீரர்களுக்கும், மாட்டின் உரிமையாளர்களுக்கும் வனத்துறை அமைச்சர் மருத்துவர்மா.மதிவேந்தன் பரிசுகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் விலங்குகள் நல வாரிய உறுப்பினர் முனைவர் எஸ்.கே. மிட்டல், நாமகிரிப்பேட்டை ஒன்றிய கழகச் செயலாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.பி.இராமசுவாமி, நாமக்கல் வருவாய் கோட்டாட்சியர் (பொ) சே.சுகந்தி, கூடுதல் காவல் கண்காணிப்பாளர் (மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு) ராஜூ, துணை காவல் கண்காணிப்பாளர் செந்தில்குமார், கால்நடை பராமரிப்புத் துறை இணை இயக்குநர் (பொ) மரு.நடராஜன், இராசிபுரம் வட்டாட்சியர் சுரேஷ், நாமகிரிப்பேட்டை வட்டார வளர்ச்சி அலுவலர் பாலாமுருகன் ஆகியோர் உட்பட அரசு அலுவலர்கள், வருவாய்த்துறை, காவல் துறை, ஜல்லிக்கட்டு போட்டி அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

விழாவிற்கான ஏற்பாடுகளை ஜல்லிக்கட்டு விழா குழுவினர்கள் ஆறுமுகம், சண்முகம், தமிழரசன், கதிரவன், சித்ரா சரவணன், ஜெகதீசன், பழனிவேல், ரங்கசாமி, செந்தில்குமார், இரமேஸ்குமார், தனராஜன், செவ்வந்தி, வெங்கடேஷ், கேசவன், செல்வம், இராமசாமி, அட்மா ரவீந்திரன், முருகேசன், பழனிச்சாமி, செந்தில், ராஜா, முத்துகுமார், ஹரிஹரன், அருணாசலம், நவீன், மோகன்ராஜ், கோபால், ஜெயலட்சுமி, மகேஸ்வரி, சின்னுசாமி உள்ளிட்டோர் மேற்கொண்டனர்.

தமிழ்நாட்டை குழந்தைத் தொழிலாளர் இல்லா மாநிலமாக்க

அனைத்துத்துறை அலுவலர்களுக்கான பயிற்சிப்பட்டறை!

அமைச்சர் சி.வெ.கணேசன் துவக்கி வைத்தார்!

சென்னை, ஜூன் 1 - தமிழ்நாட்டை குழந்தைத் தொழிலாளர் இல்லாத மாநிலமாக உருவாக்க அனைத்துத் துறை அலுவலர்களுக்கான பயிற்சி பட்டறையை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி. கணேசன் துவக்கி வைத்தார்.

குழந்தைத் தொழிலாளர் முறையினை முற்றிலும் அகற்றிடவும் மற்றும் தமிழ்நாட்டை குழந்தைத் தொழிலாளர் முறை இல்லாத மாநிலமாக உருவாக்கிடவும் தமிழ்நாடு அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. 1986ம் வருட குழந்தை மற்றும் வளரிளம் பருவத் தொழிலாளர் (தடுத்தல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டத்தை சீரிய முறையில் செயல்படுத்த மாநில செயல் திட்டம், நிலையான இயக்க நடைமுறைகள் ஆகியவற்றை உருவாக்கி குழந்தைத் தொழிலாளர் முறையை அகற்றுதலில் தமிழ்நாடு அரசு பிற மாநிலங்களுக்கு முன்மாதிரியாக திகழ்கின்றது. குழந்தைகளை வேலைக்கு அமர்த்து வோர் மீது தவிர சட்ட, அமலாக்கம் மூலம் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. 01.04.2022 முதல் 30.04.2023 வரை 321 குழந்தைகள் மீட்கப்பட்டு மறுவாழ்வு அளிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட காலத்தில் 224 வழக்குகளில் தண்டனை வழங்கப்பட்டு, ரூ.48,28,000/ அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

குழந்தைத் தொழிலாளர் முறை அகற்றுதலில், பல்வேறு துறைகளின் பங்களிப்பு கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இதனைக் கருத்தில் கொண்டே தமிழ்நாடு அரசு, குழந்தைத் தொழிலாளர் முறை அகற்றுதலில் பல்வேறு துறைகளுக்கும் பயனளிக்கக் கூடிய வகையில் மாநில அளவிலான பயிற்சிப் பட்டறையை நடத்திட ஆணை பிறப்பித்துள்ளது. அதனடிப்படையில், இன்று (30.05.2023) G.R.T. கிராண்ட் ஓட்டலில் பல்வேறு துறைகளுடன் மாநில அளவிலான பயிற்சி பட்டறை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சரால் துவக்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முகமது நசிமுத்தின், முதன்மைச் செயலாளர் / தொழிலாளர் ஆணையர் முனைவர் அதுல் ஆனந்த், கூடுதல் காவல்துறை தலைமை இயக்குநர் (இரயில்வே) திருமதி வே.வனிதா, பதிவாளர் / மாவட்ட நீதிபதி ட்டி.என். முரளிதரன், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் செந்தில்குமார், தொழிலாளர் துறையின் உயர் அலுவலர்கள், சட்ட அமலாக்க அலுவலர்கள், தொழிலாளர் துறையுடன் பங்களிப்பில் உள்ள அனைத்து துறைகள், அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் வேலை யளிப்பவர் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஆவடியில் ஆரம்ப சுகாதார பள்ளி!

திருவள்ளூர் , ஜூன் 1 - திருவள்ளூர் மாவட்டம் ஆவடி தொகுதிக்குட்பட்ட திருநின்றவூர் நகராட்சி 24 வது வார்டு கிருஷ்ணன் கோவில் தெருவில் அரசு ஆரம்ப சுகாதார பள்ளியில் ஆவடி சட்டமன்ற மேம்பாட்டு நிதியிலிருந்து 17 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கூடுதல் பள்ளி கட்டிடம் மற்றும் 6 வது வார்டு நகராட்சி எதிரில் நூலக கூடுதல் கட்டிடத்தை முன்னாள் அமைச்சரும் திருவள்ளூர் மத்திய மாவட்ட செயலாளருமான ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். உடன் நகர மன்ற தலைவர் உஷாராணி ரவி, நகரச் செயலாளர் தி.வை.இரவி, அரசு வழக்கறிஞர் எஸ். மூர்த்தி, நிர்வாகிகள் கே. ஜெ.ரமேஷ், சி.ஜெரால்டு, ஜி.ஆர்.திருமலை, ப.ச.கமலேஷ், நகராட்சி ஆணையர் புகேந்திரி உள்பட பலர் உள்ளனர்.

திருமங்கலம் முன்னாள் எம்.எல்.ஏ.

ம.முத்துராமலிங்கம் சகோதரர் ம.மூர்த்தி மறைவு!

முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஜூன் 1 - மதுரை தெற்கு மாவட்டம், திருமங்கலம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், கழக மாநில விவசாய அணி இணைச் செயலாளருமான ம.முத்துராமலிங்கத்தின் சகோதரர் ம.மூர்த்தி அவர்கள் நேற்று முன்தினம் (30.05.2023) இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

தகவல் அறிந்து, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது ஆழ்ந்த இரங்கலை, முன்னாள் எம்.எல்.ஏ. ம.முத்துராமலிங்கத்திற்கும் மற்றும் அன்னாரது குடும்பத்தாருக்கும் தெரிவித்துள்ளார்.

நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் வட்டம், நாமகிரிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், முள்ளுக்குறிச்சி ஊராட்சி, தும்பல்பட்டி கிராமத்தில் மாபெரும் ஜல்லிக்கட்டுப் போட்டி நடைபெற்றது. நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா தலைமையில் நடைபெற்ற போட்டியை வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் கொடியசைத்து துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் விலங்குகள் நல வாரிய உறுப்பினர் முனைவர் எஸ்.கே. மிட்டல், நாமகிரிப்பேட்டை ஒன்றிய கழகச் செயலாளர் கே.பி.இராமசுவாமி, நாமக்கல் வருவாய் கோட்டாட்சியர் (பொ) சே.சுகந்தி மற்றும் அரசு அலுவலர்கள், வருவாய்த்துறை, காவல்துறை, ஜல்லிக்கட்டுப் போட்டி அமைப்பாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.